புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 235 · 01-03-2026 · ஞாயிறு · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி- புதுச்சேரி
Volum 01 · Issue: 235 · 01-03-2026 · Sunday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy-Puducherry


FORM IV

Statement about ownership and other particulars about newspaper to be published in the first issue every year after the last day of February.

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of publication | : | TIRUCHIRAPPALLAI |
| 2. | Periodicity of its publication | : | DAILY |
| 3. | Printer's Name | : | DIWAKAR |
| | Nationality | : | INDIAN |
| | Address | : | BEAUTIFUL PRINTERS 27/65,DEVARAJ STREET, ROYAPETTAH, CHENNAI. TAMIL NADU-600014 |
| 4. | Publisher's Name | : | K.SABIULLA |
| | Nationality | : | INDIAN |
| | Address | : | 378/46.10TH CROSS STREET, RAJIV NAGAR,MANAPPARAI, TIRUCHIRAPPALLAI, TAMIL NADU -621306 |
| 5. | Editor's Name | : | K.SABIULLA |
| | Nationality | : | INDIAN |
| | Address | : | 378/46.10TH CROSS STREET, RAJIV NAGAR,MANAPPARAI, TIRUCHIRAPPALLAI, TAMIL NADU -621306 |

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding More than one per cent of the total Capital.

I, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 01-03-2026

K.SABIULLA
Signature of publisher


# மதுரை, புதுச்சேரிக்கு பிரதமர் மோடி இன்று வருகை

*மதுரை / புதுச்சேரி: மார்ச். 1–*

மதுரை, புதுச்சேரியில் இன்று (மார்ச் 1) நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் பிரதமர், திருப்பரங்குன்றம் கோயிலுக்கும் செல்கிறார். இதையொட்டி, நேற்று மாலை டெல்லியில் இருந்து சென்னை வந்த பிரதமர் மோடி இரவு சென்னையில் தங்கினார்.

காலையில் புதுச்சேரியில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் ஹெலிகாப்டரில் பிற்பகல் 2.45 மணியளவில் தஞ்சாவூர் செல்கிறார். அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு 3.30 மணியளவில் மதுரை வருகிறார்.

மதுரை விமான நிலைய வளாகத்தில் வான் கட்டுப்பாட்டு கோபுரத்தை திறந்து வைக்கும் பிரதமர், புதுப்பிக்கப்பட்ட ரயில் நிலையங்கள், பரமக்குடி ராமநாதபுரம் நான்கு வழிச் சாலை திட்டங்களை காணொலி வாயிலாகத் திறந்து வைக்கிறார்.



மாலை 4 மணியளவில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்கிறார். மாலை 4.30 மணியளவில் மண்டேலா நகரில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகிறார்.

இதில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன், தமாகா தலைவர் ஜி.கே. வாசன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். பொதுக்கூட்டம் முடிந்து மதுரை விமானம் நிலையம் சென்று, அங்கிருந்து மாலை 6.10 மணியளவில் விமானத்தில் டெல்லி புறப்பட்டுச் செல்கிறார். மண்டேலா நகரில் நடைபெறும் தேர்தல் பிரச்சார கூட்டத்துக்காக பிரம்மாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது.

பிரதமர் வருகையையொட்டி 20 எஸ்.பி.க்கள், 13 ஏடிஎஸ்பிக்கள், 35 டிஎஸ்பிக்கள் மேற்பார்வையில் 7 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

புதுச்சேரியில் நலத் திட்டங்கள்: முன்னதாக, சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் புதுவைக்கு இன்று காலை 11:40 மணிக்கு பிரதமர் மோடி வருகிறார். அவரை துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி உள்ளிட்டோர் வரவேற்கின்றனர். பின்னர், கார் மூலம் விழா நடைபெறும் லாஸ்பேட்டைக்கு வந்து, அரசு நலத் திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசுகிறார். பிரதமர் வருகை முன்னிட்டு, மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படையினர் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். புதுச்சேரி சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ.1,100 கோடியில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் கட்டும் அறிவிப்பை பிரதமர் மோடி வெளியிடுகிறார்.

பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில், “புதுச்சேரியில் ரூ.2,700 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைக்கும் பிரதமர், பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதிமுக தனிச் சின்னத்தில் தான் போட்டியிடும்: வைகோ திட்டவட்டம்

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, “ இன்று மூன்று கோரிக்கைகளை முதல்வர் ஸ்டாலினிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்காக அவரை சந்தித்தேன். காயிதே மில்லத் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதை திமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்க வலியுறுத்தினேன். உடனே அக்கோரிக்கையை தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

இரண்டாவது, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கும்,விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் கொடுப்பதை தடுப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது. எனவே, சூரிய சக்தி மூலம் இலவச மின்சாரம் வழங்க முடிவெடுக்க கோரிக்கை வைத்தேன். அதனையும் திமுக தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள். மூன்றாவதாக, வீரபாண்டிய கட்டபொம்மனின் முன்னோர்கள் திருப்பரங்குன்றம் கோயிலில் 500 ஆண்டுகளுக்கும் மேலாக கட்டபொம்மன் சத்திரம் அமைத்து 9வது மண்டகபடி செய்துவந்தனர். அவர்களின் நேரடி வாரிசு பீமராசா என்பவரிடம் முறைகேடாக கையெழுத்து பெற்று இன்னொரு குடும்பம், அந்த சத்திரம் எங்களுடையது என்று அறநிலையத்துறை மூலம் சொல்லியுள்ளனர். இதில் உரிய நடவடிக்கை எடுக்க முதல்வரிடம் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் சேகர்பாபுவிடம் இந்த பிரச்சினையை சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்யச் சொல்லியுள்ளார்.

தொகுதிப் பங்கீடு பற்றி முதல்வரிடம் எதுவும் பேசவில்லை. தொகுதிப் பங்கீடு குறித்து மதிமுக குழு முதற்சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மீண்டும் இரண்டாவது சுற்றுக்கு அழைப்பு வந்தால் பேச்சுவார்த்தை நடத்தப்படும். பேச்சுவார்த்தைக்கு பின்னரே இதுபற்றி பேச முடியும். மதிமுக தனிச்சின்னத்தில் தான் போட்டியிடும் என எங்கள் அவைத்தலைவர் சொல்லியுள்ளார். அதுதான் எங்களின் நிலைப்பாடு.

மோடி எத்தனை முறை காவடி தூக்கினாலும், பாஜக தமிழகத்தில் காலூன்ற முடியாது. பாஜகவால் தமிழகத்தை ஏமாற்ற முடியாது” என்றார்.




### மலைவாழ் பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவி செய்ய கரம் கோர்த்த நிறுவனங்கள்..

## ஈரோடு திண்டல் வேளாளர் கல்வி நிறுவனம் -தயா அறக்கட்டளை இணைந்து பணியாற்ற ஒப்பந்தம்

*ஈரோடு. மார்ச்.01*

ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலை கிராமங்களில் படித்து வரும் பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவிகள் செய்ய முடிவு செய்து ஈரோடு திண்டல் வேளாளர் கல்வி நிறுவனம் மற்றும் ஈரோடு தயா அறக்கட்டளை ஆகிய நிறுவனங்கள் ஒப்பந்தங்கள் செய்துள்ளன.



ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர் பர்கூர் மற்றும் சத்தியமங்கலம், திம்பம் தாளவாடி உள்ளிட்ட பல மலை கிராமங்கள் உள்ளது.

இந்த மலை கிராமங்களில் மலை கிராம பழங்குடியினர் இன மக்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர்.

தினந்தோறும் கிடைக்கின்ற கூலி வேலைகளுக்கு சென்று தங்களின் வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டிருக்கும் இவர்களின் குழந்தைகள் ஒரு நல்ல தரமாய்ந்த தனியார் பள்ளியில் படிக்கும் அளவிற்கு வசதிகள் இல்லை.

இந்த மலைவாழ் மக்கள் பழங்குடியினர் இன குழந்தைகள் பள்ளி மற்றும் கல்லூரி படிப்புகளுக்கு அரசு உதவி செய்து வந்தாலும் அது போதுமானதாக இல்லை.

இந்த நிலையில் ஈரோடு மாவட்ட நிர்வாகமும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையும், கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஒரு சமூக நோக்கத்தோடு பழங்குடியினர் என மாணவ மாணவிகளுக்கு பள்ளி மற்றும் கல்லூரி படிப்புகளுக்கும் அவர்களின் விளையாட்டு திறமைகளை வெளிக்கொண்டு வதற்கும், சில சமுதாய அமைப்புகள் முன்வந்துள்ளது.

குறிப்பாக ஈரோடு தயா அறக்கட்டளை மற்றும் ராசாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளை இவைகளின் நிறுவன தலைவர் டாக்டர் என் எம் பிரதீப், மலைவாழ் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த அந்த மாணவர்களுக்கு கல்வி மற்றும் விளையாட்டு துறையில் சிறந்து விளங்க பல்வேறு அடிப்படை உதவிகளை தொடர்ந்து செய்து வருகின்றது.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் ஒரு முக்கிய கல்வி நிறுவனமாக விளங்கும் ஈரோடு திண்டல் வேளாளர் கல்வி நிறுவனத் தலைவர் சந்திரசேகரன் மற்றும் ஈரோடு தயா அறக்கட்டளை, ராஜாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப் ஆகியோர் இணைந்து மலை கிராமங்களில் வசிக்கும் பழங்குடியினர் மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரியில் படிப்பதற்கும் மேலும் அவர்களின் விளையாட்டு திறமையை மேம்படுத்தவும் உதவிகள் செய்வது என்று இரு தரப்பினரும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இதன்மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலை கிராமங்களில் வசிக்கும் ஏழை எளிய பழங்குடியினர் என மாணவர் மாணவிகளுக்கு பல்வேறு கல்வி உதவிகள் கிடைக்கும் சூழலை ஏற்பட்டுள்ளது.

# செஞ்சியில் இருந்து பள்ளிக்குளம், சொரத்தூர் பெரும்புகை, ஆனத்தூருக்கு புதிய பேருந்து சேவையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.



விழுப்புரம், மார்ச்.1–

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் பள்ளிக்குளம், சொரத்தூர், பெரும்புகை, ஆனத்தூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து சேவையை இயக்க வேண்டுமென அரசுக்கு அக்கிராம பொது மக்கள் சார்பில் கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பள்ளிகுளம், சொரத்தூர், பெரும்புகை, ஆனத்தூர்கிராமத்திற்கு புதிய பேருந்து சேவைதொடக்க விழா நிகழ்ச்சி செஞ்சி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் விழுப்புரம் கோட்டத்தின் உதவி மேலாளர் வணிகம் சிவராமன் தலைமை தாங்கினார் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் செஞ்சி பணிமனை மேலாளர் தன்சிங் அனைவரையும் வரவேற்றார் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு புதிய வழித்தடத்தில் மூன்று பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,ஒன்றிய செயலாளர் வல்லம் தெற்கு மொடையூர் துரை, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, ஊராட்சி மன்ற தலைவர்கள் பள்ளிக்குளம் சுகுணா வேலாயுதம்,ஆனத்தூர் பழனி, சொரத்தூர் தரணி அசோக்,தொமுச நிர்வாகிகள் லூர்து இமானுவேலு, அரி கிருஷ்ணன், தியாக ராஜன், காதர் நவாஸ், தமிழ்மணி, ராஜேந்திரன், நிர்வாகிகள் செல்வமணி, அரசிரமேஷ், தொண்டரணி பாஷா, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையின் ஆண்டு விழா!!!



கோவை மார்ச்.1–

கோவை போத்தனூர் ரயில்வே அரங்கில் கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையின் 49வது ஆண்டு விழா மிக சிறப்பாக கொண்டாடப் பட்டது .விழாவிற்கு வந்த தமிழ் அறிஞர் களையும் தமிழ் ஆர்வலர் களையும் பேரவையின் நிர்வாகிகளையும் பேரவையின் தலைவர் பாவலர். இரா.தம்பிதுரை வரவேற்றார்.

பாவேந்தர் பாரதி தாசன் பேரவையின் 49 வது ஆண்டு விழாவுக்குமுத்து எஞ்சினியரிங் நிர்வாக இயக்குநர் அரிமா முத்து. டாக்டர்.ஆர் பழனிசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கவிஞர் பொன் சிங் அவர்களின் உண்மை உறங்கும் நேரம் உறவும் பிரிவும் உள்ளத்தின் கதவுகள் ஆகிய 25 புத்தகங்களை பாவேந்தர் பாரதி தாசன்பேரவைக்கு நன்கொடையாக வழங்கினார். தமிழ் இலக்கியவட்டத்தில் உள்ள படைப்பாளிகள் கவிஞர்கள் எழுத்தாளர்களை அரவணைத்து தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு வரும் வள்ளல் அரிமா முத்து.டாக்டர். ஆர். பழனிசாமி அவர்களுக்கு கவிஞர் பொன் சிங்காரம் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.செயல் தலைவர் பொறியாளர் கருணாநிதி நன்றி உரையாற்றினார்.

# திருப்பூரில் சாக்கடை கால்வாய் நீர் தூர்வாரப்படாமல் பொதுமக்கள் மிகவும் அவதி!!



திருப்பூர் , மார்ச்.1–

திருப்பூர் காலேஜ் ரோடு 29 வது வார்டு பகுதி தமிழகத்தில் அதிக பெண்கள் படிக்கும் ஜெய் வ பாய் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு அதிக மாணவிகள் செல்லும் பகுதியான. காலேஜ் ரோடு ஒற்றைக்கண் பாலத்தில் சாக்கடை கால்வாய் நீர் தூர்வாரப்படாமல். பள்ளி செல்லும் மாணவ மாணவிகள் பொதுமக்கள் தினம்தோறும் முகம் சுளித்தவாறு சென்று வருகிறார்கள். இதை பலமுறை 29 வது வார்டு அதிமுக மாமன்ற உறுப்பினர் சின்னச்சாமி புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆணையாளர் அமித் அதிகாரிகளிடம் இடம். முறையிட்டும் நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வரும் திமுக மேயர் தினேஷ்குமார்.

அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் சாக்கடை நீரை தூர்வாரப்படுமா என ஆதங்கப்பட்டு வருகின்றனர்.

# கிருஷ்ணகிரியில் வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு (FERA) சார்பில் தொடர் காத்திருப்பு போராட்டம்!

கிருஷ்ணகிரி: மார்ச்.1–

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு (FERA) சார்பில் இன்று பிரம்மாண்டமான தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.



முக்கிய கோரிக்கைகள்: வருவாய்த்துறையினரின் நியாயமான 9 அம்சக் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி, மாநிலம் தழுவிய காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மாவட்டத் தலைநகர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்ட விவரம்: நாள்: 25.02.2026 முதல் (தொடர்ந்து நடைபெறுகிறது) நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை. இடம்: மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி. இந்த போராட்டத்தில் திரளான வருவாய்த்துறை ஊழியர்கள் கலந்துகொண்டு தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். "ஒற்றுமையே பலம்" என்ற தாரக மந்திரத்துடன், கோரிக்கைகள் வெல்லும் வரை போராட்டம் தொடரும் என சங்க நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.முக்கிய 9 அம்சக் கோரிக்கைகள்:

காலிப்பணியிடங்களை நிரப்புதல்: தமிழகம் முழுவதும் வருவாய்த்துறையில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரையிலான ஆயிரக்கணக்கான பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். பணிப் பாதுகாப்பு மற்றும் பணிச்சுமை குறைப்பு: அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் போது ஏற்படும் கூடுதல் பணிச்சுமையைக் குறைக்க வேண்டும். குறிப்பாக, களப்பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

புதிய பணியிடங்களை உருவாக்குதல்: மக்கள்தொகை பெருக்கத்திற்கு ஏற்ப புதிய வருவாய் வட்டங்கள் (Taluks) மற்றும் கோட்டங்களை (Divisions) உருவாக்கி, அதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

பதவி உயர்வு நடைமுறைகளைச் சீரமைத்தல்: வருவாய்த் துறையில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பதவி உயர்வுப் பட்டியலை (Seniority List) வெளியிட்டு, தகுதியுள்ளவர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்க வேண்டும்.

கணினித் துறை ஊழியர்களைப் பணி வரன்முறைப் படுத்துதல்: மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் தற்காலிக கணினி இயக்குபவர்கள் மற்றும் உதவியாளர்களைப் பணி வரன்முறை செய்து, அவர்களுக்கு முறையான காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துதல்: பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைக் (CPS) கைவிட்டு, மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தையே (Old Pension Scheme) அமல்படுத்த வேண்டும்.

வட்டாட்சியர்களுக்கான வாகன வசதி: களப்பணியில் 24 மணிநேரமும் ஈடுபடும் வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்களுக்குப் போதிய எரிபொருள் வசதியுடன் கூடிய புதிய வாகனங்களை வழங்க வேண்டும்.

தேவையற்ற இலக்குகளைத் தவிர்த்தல்: பட்டா மாறுதல், சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிகளில் எட்ட முடியாத காலக்கெடு (Deadlines) மற்றும் அழுத்தங்களைத் தவிர்த்து, நடைமுறைக்குச் சாத்தியமான கால அவகாசம் வழங்க வேண்டும்.

இதர படிகள் மற்றும் சலுகைகள்: களப்பணிப் படி (Field Allowance), இடர்படி மற்றும் கூடுதல் பொறுப்புகளைக் கவனிப்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இதர சலுகைகளை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்து கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# கும்பகோணத்தில் வடிவமைப்பு : சேலம் பனமரத்துப்பட்டியில் ரூ.10 கோடி மதிப்பு 38 அடி உயரம்,65 டன் எடையுடைய ஐம்பொன்னாலான அம்மன் சிலை.

சேலம். மார்ச்.1–

சேலம் பனைமரத்துப் பட்டியில் உள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்காக, கும்ப



கோணம் அருகேயுள்ள சத்திரம் கருப்பூரில் வடிவமைக்கப்பட்ட 38 அடி உயரம், 65 டன் எடையுடைய ஐம்பொன்னாலான ஆதி பராசக்தி அம்மன் சிலை நேற்று டாரஸ் லாரியில் அனுப்பிவைக் கப்பட்டது.

சேலம் மாவட்டம் பனைமரத் துப்பட்டியில் உள்ள பழமையான ஆதிபராசக்தி கோயில் முகப்பில் பிரதிஷ்டை செய்வதற்காக, 65 டன் எடை, 38 அடி உயரம் உடைய ஐம்பொன்னால் ஆன சிலை வடிவமைக்கும் பணி கும்பகோணம் வட்டம் சத்திரம் கருப்பூரில உள்ள தரணி மெட்டல்ஸ் அண்ட் ஆர்ட்ஸ் நிறுவனத்திடம் 2016ம் ஆண்டு வழங்கப்பட்டது.

இதையடுத்து, ஸ்தபதி கோபு தலைமையில் 30க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த 10 ஆண்டுகளாக சிலையை வடிவமைத் தனர்.

இப்பணி நிறைவடைந் ததையொட்டி, நேற்று காலை 3 ராட்சத கிரேன்கள் மூலம் டாரஸ் லாரியில் 38 அடி உயர சிலை ஏற்றப்பட்டு, சிறப்பு பூஜைகள் செய்யப் பட்டு, மேளதாளங்கள் முழங்க விமரிசையாக அனுப்பி வைக்கப் பட்டது.

இந்த சிலை இன்று (மார்ச் 1) அந்த கோயிலுக்கு சென்றடைகிறது. இது தொடர்பாக சிலையை வடிவமைத்த ஸ்தபதி கோபு கூறிய போது,"ஐம்பொன்னால் வடிவமைக்கப்பட்ட 65 டன் எடையுடைய ஆதிபராசக்தி அம்மன் சிலையின் மதிப்பு ரூ.10 கோடி. பனைமரத்துப் பட்டி கோயிலில் 13 அடி கருங்கல் பீடம் கட்டப்பட்டு, அதன் மீது இந்த சிலை விரைவில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது"என்றார்.





வேலூர் மாவட்டம் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகம கூட்டணியின் தெருமுனை பிரச்சாரம் கூட்டம் வேலூர் மேற்கு ஒன்றியம் கருகாம்பத்தூர் ஊராட்சி சிறப்பாக நடைபெற்றது அனைத்து கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# வருவாய்த்துறையினர் மூன்றாவது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் வருவாய் துறை சார்ந்த பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் அவதி :

திருவள்ளூர் மார்ச் 01 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி மூன்றாவது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த காத்திருப்பு போராட்டத்தில் மேம்படுத்தப்பட்ட ஊதியம்



வழங்கிட வேண்டும், சிறப்பு பணி பாதுகாப்புச் சட்டம் இயற்றிட வேண்டும்.

கிராம உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் அரசு ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்படும் 10 சதவீதம் பங்களிப்பை ரத்து செய்திட வேண்டும், பணியின் போது உயிரிழக்கும் அரசு ஊழியர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கான உச்ச வரம்பு 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதை ரத்து செய்திட வேண்டும் உள்ளிட்ட ஒன்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 3 வது நாளாக காத்திருப்பு போராட்டத்தில் 200க்கும் மேற்பட்ட வருவாய் துறை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வருவாய் துறை சார்ந்த பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். ஊழியர்கள் இல்லாததால் நீதிமன்ற உத்தரவுகளை கூட நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதாக அதிகாரிகளும் கதறி அழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

# தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் அவதி



கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஊராட்சிக்குட்பட்ட மசூதி தெருவில் கடந்த 8 மாதங்களாக மினி சின்டெக் டேங்க் செயல்படாததால், அப்பகுதி பொதுமக்கள் கடும் குடிநீர் கட்டுப் பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 8 மாதங்களுக்கு மேலாக இந்தத் தண்ணீர் மோட்டர் பழுதடைந்து நிலையில் உள்ளது. இது குறித்துப் பலமுறை சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகளிடம் புகார் அளித்தும், இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

தற்போது புனித ரம்ஜான் மாதம் என்பதால், நோன்பு இருக்கும் இஸ்லாமியப் பெருமக்களுக்குத் தண்ணீரின் தேவை மிக அத்தியாவசியமாக உள்ளது. ஆனால், ஒரு குடம் தண்ணீருக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவல நிலை நீடிப்பதாக அப்பகுதி பெண்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிகாரிகள் அதிகாரிகளின் அலட்சியப் போக்கைக் கண்டித்து, இன்று பொதுமக்கள் திரளாகச் சென்று மத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர். புகாரைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள், "நாளைக்குள் பழுதுகளைச் சரிசெய்து தண்ணீர் விநியோகம் சீராக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதி அளித்தனர்.

அதிகாரிகளின் இந்த வாக்குறுதியை ஏற்றுப் பொதுமக்கள் கலைந்து சென்றனர். இருப்பினும், "நாளைக்குள் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரப்படாவிட்டால், ஊர் மக்கள் அனைவரும் திரண்டு மிகப்பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம்" என்று பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்

# ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் பிறந்தநாள் விழாவில் பங்கேற்பு





புதுச்சேரி 27.2.2026 அன்று அன்னை தெரேசா மகளிர் மற்றும் குழந்தைகள் அறக்கட்டளை செயலாளர் அருணா அவர்களுக்கு 4 வது குறுக்கு தெரு ரேயன்போ நகரில் அவர்களின் இல்லத்தில் பிறந்தநாள் விழா கோலாகலமாக ஆடலும் பாடலுடன் பிறந்தநாள் விழா நடைபெற்றது இந்த விழாவுக்கு சிறப்பு அழைப்பாளராக ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் கலந்து கொண்டு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். மேலும் விழாவுக்கு சிறப்பு அழைப்பாளர் உதவும் இதயம் இயக்கம் நிறுவனர் கவிஞர் திரு புதுவை குமார் அவர்கள் அமமுக மாநில செயலாளர் முருகன் அவர்கள் அன்னை தெரேசா அறக்கட்டளை தலைவி ராஜாத்தி அம்மாள் துணை தலைவி கவிதா சாந்தி வள்ளலார் அறக்கட்டளை திறுவனர் சீனிவாசன் ஜெயக்குமாரி சமூக சேவகி காயத்ரி மற்றும் பசும்போன் பார்வதி அன்னை தெரேசா அறக்கட்டளை நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு செயலாளர் அருணா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெறிவித்தனர் உடன் திருமதி அருணாவின் கனவர் மற்றும் மகன் மகள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



எதிர்வரும் 2026, புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில் போட்டியிட முன்னாள் திமுக சட்டமன்ற உறுப்பினர், .நந்தா ஜி . சரவணன் MBA., அவர்கள் மாநில திமுக அமைப்பாளர் இரா . சிவா அவர்கள் முன்னிலையில் நேற்று 27.02.2026 காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு தாக்கல் செய்தார்.

# விவசாயத்திற்கு புதிய பாதை பயோடைனமிக் விவசாய பயிற்சி முகாம்.




வையம்பட்டி மார்ச் 1

திருச்சி மாவட்டம் கடவூர், இன்பா சேவா சங்கத்தில், கிபிமிவிஷிகி ழிறிளி அமைப்பின் சார்பில் "அடிப்படை பயோடைனமிக் விவசாயம்" குறித்த மூன்று நாள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. இந்த பயிற்சியில் சுற்றுவட்டார கிராம ப்புறத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

பயிற்சி முகாமை காந்திகிராம ரூரல் யூனிவர்சிட்டி முன்னாள் துணைவேந்தர் டாக்டர் மார்க்கண்டன் தொடங்கிவைத்து, நிலைத்துறையான மற்றும் புதுப்பிக்கும் விவசாய முறைகள் காலத்திற்குத் தேவையானவை என வலியுறுத்தினார். மேலும், பயோடைனாமிக் அசோசியேஷன் தலைவர் சந்திரசேகர், கூறிய பொழுது மண் வளம் பாதுகாப்பு, காலநிலை மாற்ற இது போன்ற சவால்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டில் பயோடைனமிக் விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

முதல் நாளில் பியர்ஸ் இந்தியா செயலாளர் டாக்டர் பெருமாள் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. அவருடன் பயோடைனமிக் அசோசியேஷன் ஆஃப் இந்தியாவின் முதன்மை பயிற்சியாளர்கள் ஜெய்சன் ஜே, ஜெரோம் மற்றும் அன்பு ஆகியோர் இணைந்து வழிநடத்தினர்.

காலை அமர்வு: பயோடைனமிக் விவசாயத்தின் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் தத்துவம் குறித்த கோட்பாட்டு வகுப்புகள். மற்றும் மாலை அமர்வு: பி.டி. கம்போஸ்ட் தயாரித்தல் உள்ளிட்ட செயல்முறை பயிற்சிகள். பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வத்துடன் செயல்பட்டு, மண் சீரமைப்பு மற்றும் இயற்கை விவசாய முறைகள் குறித்து நடைமுறை அறிவை பெற்றனர். இது ஒரு பயனுள்ள மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் கற்றல் அனுபவமாக அமைந்தது.

விவசாயிகளின் உற்சாகமும் ஆர்வமும், நிலைத்துறையான கிராம வளர்ச்சிக்கான பயோடைனமிக் மற்றும் புதுப்பிக்கும் விவசாய முறைகளின் மீதான அதிகரித்து வரும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

மூன்று நாட்கள் அர்த்தமுள்ள கற்றலும் மாற்றமும் நிறைந்த இந்த முயற்சி, எதிர்கால நிலைத்துறையான விவசாயத்திற்கான சிறந்த தொடக்கமாக அமையும்.

# புதுச்சேரியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை (MGNREGA) பாதுகாக்கும் போராட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி, மார்ச்.1–

புதுச்சேரி மாநில ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கதன் மாநில தலைவர் அமுதரசன் அவர்களின் தலைமையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை (MGNREGA) பாதுகாக்கும் போராட்டம் நடைபெற்றது. கிராமப்புற தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல மாநிலங்களிலிருந்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கதன் அகில இந்திய தலைவர் திரு. சுனில் பண்வார், துணை தலைவர் திரு. குணால் பானர்ஜி, புதுச்சேரி பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு வெ. வைத்திலிங்கம் முன்னாள் முதல்வர் திரு வே.நாராயணசாமி சந்தித்து 2026 சட்டமன்றத் தேர்தலை குறித்து ஆலோசனைகளும் மற்றும் 100 நாள் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைகளை கேட்டறிந்தனர்

இதில் புதுச்சேரி பொறுப்பாளர் ரமேஷ், தெலுங்கானா பொறுப்பாளர் சுபாஷ், தமிழ்நாடு பொறுப்பாளர் இனாமுல் ஹசன், காளிமுத்து மற்றும் ஆந்திரா பொறுப்பாளர் விஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்

போராட்டத்தின் போது 100 நாட்கள் ஆண்டுக்கு வேலை உறுதி, கூலி நேரத்தில் வழங்குதல், வேலை செய்வது அரசியலமைப்பு உரிமையாக மீண்டும் நிலைநாட்டுதல், பஞ்சாயத்து ராஜ் அதிகாரங்களை பாதுகாத்தல், MGNREGA தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.400 ஊதியம் வழங்குதல் மற்றும் மாநிலங்களுக்கு நிலுவை நிதி உடனடியாக விடுவித்தல் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. வேலை செய்யும் உரிமை, கூலி பெறும் உரிமை மற்றும் உள்ளூர் நிர்வாக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் ஒருங்கிணைந்த கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற புதுச்சேரி மாநில சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அரியாங்குப்பம் RGPRS தலைமை அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் RGPRS மாநில துணைத் தலைவர் திரு. கோவிந்தன், மாநில பொதுச் செயலாளர் அரங்க முருகையன், சங்கர் பாபு, பாஸ்கர், சிவசங்கரன், வேல்முருகன், புஷ்பராஜ், மாநில பொருளாளர் பழனிவேலு, மாநில செயலாளர்கள் சத்தியசீலன், சிவபாலன், ஹேமவதி செல்வம், சசிகுமார், ஜே.பி. ஜான் பாட்ஷா, மாநில இணைச் செயலாளர் ஜெயலட்சுமி, மாவட்ட தலைவர் சீனிவாசன், மாவட்ட துணைத்தலைவர் தாண்டவராயன், மாவட்ட பொதுச்செயலாளர்கள் ஆறுமுகம், சிவபெருமான், மாவட்ட பொருளாளர் வாசு, மாவட்ட செயலாளர் நாராயணசாமி, தொகுதி தலைவர்கள் ஹரி கிருஷ்ணன், செல்வம், திருநாராயணன், வீராசாமி,ஜி.எம். சங்கர், ராமநாதன், தொகுதி துணைத்தலைவர்கள் செல்வகுமார், ரவி, ரஞ்சித், உள்ளிட்ட பஞ்சாயத்து ராஜ் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு அமைப்பு வலுப்படுத்தல் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகள் மேற்கொண்டனர்

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2,3 ஆகிய தேதிகளில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று, குடிமைப் பொருட்களை விநியோகம் செய்திட அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது

திருச்சி, மார்ச்.1–

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 12.08.2025 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 1,211 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 76,518 குடும்ப அட்டைகளில் உள்ள 95,689 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்து வரும் மார்ச் 2026 ஆம் மாதத்தில் 02.03.2026 மற்றும் 03.03.2026 ஆகிய தேதிகளில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று, குடிமைப் பொருட்களை விநியோகம் செய்திட அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் முதலமைச்சர் தாயுமானவர் திட்டம் மூலம் இல்லம் தேடி குடிமைப் பொருட்கள், 02.03.2026 மற்றும் 03.03.2026 ஆகிய தேதிகளில் விநியோகம் செய்யப்பட உள்ளது. இந்த இரண்டு தினங்களில் பயனாளிகள் குடிமைப் பொருட்களை அவர்களின் இல்லங்களிலேயே பெற்றுக்கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், தெரிவித்துள்ளார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# பாரதிய ஜனதா கட்சி சார்பில் சக்தி கேந்திர தெருமுனைப் பிரச்சாரம்



வல்லம் மார்ச் : 1

பாரதிய ஜனதா கட்சி சார்பில் தமிழ்நாடு முழுவதும் சக்தி கேந்திர தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்று வரும் நிலையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகா வல்லம் தெற்கு ஒன்றியம் மயிலம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட சக்தி கேந்திர பூத் என் 48 49 50 பூத்துகளுக்கான தெருமுனை பிரச்சாரம் நாட்டார் மங்கலம் கிராமத்தில் நடைபெற்றது.

சக்தி கேந்திர பொறுப்பாளரும் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் க.சிவசண்முகம் தலைமை தாங்கினார். பாஜக மாநில செயலாளர் முரளி (எ)ரகுராம் ரெட்டியார் முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக

மாநில செயற்குழு உறுப்பினர் ஏ.டி ராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் . நிகழ்ச்சியில் மாவட்ட பொது செயலாளர் பாண்டியன் மாவட்டத் துணைத் தலைவர் எத்திராஜ் மண்டல தலைவர் எழிலரசன் அறிவு சார் பிரிவு மாவட்டத் தலைவர் முருகன் மத்திய நலத்திட்ட பிரிவு மாவட்ட தலைவர் ஐயப்பன் மற்றும் கூட்டணி கட்சி சார்பாக வல்லம் ஒன்றிய அதிமுக செயலாளர் விநாயாகம் ,முன்னாள் ஒன்றிய செயலாளர் ஆனந்தி அண்ணாதுரை பாலமுருகன் மனோகர் பா.ஜ.க

பட்டியல் அணி மண்டல தலைவர் நாராயணசாமி சுகுமார் மாஸ்டர்கள் சுகந்தன், புகழ் நிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பட்டியலணி பொதுச் செயலாளர் என் எம் வெங்கடேசன் நன்றி கூறினார்

# மணப்பாறையில் வாழ்நாள் போராளி .ஆர் நல்ல கண்ணுக்கு மௌன ஊர்வலம் புகழ் அஞ்சலி

மணப்பாறை மார்ச்.1

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள காமராஜர் சிலை அருகில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தோழர் வாழ்நாள் போராளி ஆர். நல்ல கண்ணுக்கு அனைத்துக் கட்சி சார்பில் மௌன ஊர்வலம் நகரின் முக்கிய வீதி வழியாக சென்று பேருந்து நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலை ஆட்டோ நிறுத்தம் முன்பாக அவரின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்







இவ் அஞ்சலி நிகழ்விற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிச்சாமி தலைமை வகித்தார் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் இந்திரஜித் திராவிட முன்னேற்றக் கழக நகர செயலாளர் மு.மா செல்வம் சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கிருஷ்ணகோபால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிதம்பரம் காங்கிரஸ் கட்சி நகரத் தலைவர் முருகேசன் பாரதிய ஜனதா கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் மாலா மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக வடக்கு ஒன்றிய செயலாளர் சுப்ரமணி விடுதலை சிறுத்தைகள் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் சக்தி திராவிட கழக நகர நகரத் தலைவர் ரமேஷ் மனிதநேய மக்கள் கட்சி நகர தலைவர் அக்பர் சமூக ஆர்வலர் டைலர் பாலன் தமிழக வெற்றிக் கழக திருநாவுக்கரசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.தங்கராசு தேசிய முற்போக்கு திராவிட கழக நகர செயலாளர் கோவிந்தராஜ் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி பொறியாளர் நடராஜ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் வையம்பட்டி ஒன்றிய குழு உறுப்பினர் வீராசாமி ஆகியோர் புகழஞ்சலி உரை நிகழ்த்தினார்

திராவிட முன்னேற்றக் கழக ஒன்றிய செயலாளர் ராமசாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் தங்கராசு துணை செயலாளர் திருநாவுக்கரசு மாவட்ட குழு உறுப்பினர்கள் தங்கராசு அருள் ஆரோக்கியம் பெருமாள் வெள்ளகண்ணு பிரேமா ரேணுகா நகர்மன்ற உறுப்பினர் மனோன்மணி முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சௌகத் நகரகுழு ராஜா லாரன்ஸ் மைக்கல் முரளி அலி ஏ ஐ டி யு சி அரசு போக்குவரத்துக் கழக மாநிலத் துணைத் தலைவர் சுப்பிரமணி மண்டல செயலாளர் சுந்தர்ராஜ் மணப்பாறை கிளை பொருளாளர் கண்ணன் மக்கள் அதிகாரம் லாரன்ஸ் பாலசுப்பிரமணி கண்ணன் தமிழர் தேசிய முன்னணி கட்சி உலகநாதன் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி ஆறுமுகம் சாகுல் ஹமீத் குமார் பாரதிய ஜனதா கட்சி வழக்கறிஞர் ஜோதி மனிதநேய மக்கள் கட்சி இக்பால் காங்கிரஸ் கட்சி மாவட்ட துணைத் தலைவர் முருகன் சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை தலைவர் நஜீம் விடுதலை சிறுத்தைகள் தெற்கு மாவட்ட பொருளாளர் மதனகோபால் அன்பு தேமுதிக தெற்கு மாவட்ட பொருளாளர் வசந்த் பெரியசாமி விவசாய சங்கம் மாநில துணை செயலாளர் சரவணன் மத்திய ஒன்றிய செயலாளர் குமார் தமிழக வெற்றி கழகம் மாவட்ட செயலாளர் கதிரவன் திருப்பதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் வட்டக் குழு உறுப்பினர்கள் சுரேஷ் சீனிவாசன் உசேன் ஷாஜகான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.நகர செயலாளர் பாலு உட்பட அனைத்துக் கட்சி நிர்வாகிகளும் தோழர் நல்லகண்ணு திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சில் செலுத்தினர்

## தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு.. ஈரோடு திண்டல் அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கல்..





ஈரோடு. மார்ச். 01

தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து திமுகவினர் பல்வேறு நல திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் அவர்களின் பிறந்தநாள் இன்று மார்ச்1 ஆம் தேதி கொண்டாடப் படுகிறது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண் டாடப்படும் முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு, திமுக சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள், பொது மக்களுக்கும் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் மாநகராட்சி பகுதிகள், நகராட்சி பகுதிகள், மற்றும் ஒன்றியம் நகரம் பேரூர் கிளை கழகம் என அனைத்து பகுதிகளிலும் நல திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இரண்டு தினங்களுக்கு முன்பாக ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில், முதல் நல திட்ட வழங்கும் விழாவாக, திண்டல் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலை பள்ளி வளாகத்தில், அங்கு படிக்கக்கூடிய ஒன்றாம் வகுப்பு முதல், பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் கலந்துகொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் சு. முத்துசாமி கல்வி உபகரண உதவிகளை வழங்கினார். இந்தவிழாவில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர்விசிசந்திரகுமார், தெற்கு மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் ஜெ. திரு வாசகம், வில்லரசம்பட்டி பகுதி செயலாளர் முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வில்லியனூர் கொம்பாக்கம் வார்டில் ரூ. 8.7 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்!







புதுச்சேரி, மார்ச்.1–

வில்லியனூர் தொகுதி கொம்பாக்கம் வார்டில் ரூ.8.7 கோடி மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதி புதுச்சேரி நகராட்சி, கொம்பாக்கம் வார்டுக்கு உட்பட்ட ஒட்டாம்பாளையம் கர்மவீரர் ஆசிரியர் குடியிருப்பில் உள்ள சீலை ஓடை ஆற்றின் கரையை ரூ. 1.32 கோடி செலவில் பலப்படுத்தும் பணி, ரூ. 6.44 கோடி செலவில் ஒட்டாம் பாளையம் கர்மவீரர் ஆசிரியர் குடியிருப்பில் முதல் தெரு முதல் 10 தெரு வரை உள்ள குறுக்குத் தெருக்களில் புதிய தார்ச்சாலை மற்றும் 'யு' வடிவ வாய்க் கால், கொம்பாக்கம் லட்சுமி அவென்யூ மூன்றாவது குறுக்குத் தெரு தொடங்கி சிமெண்ட் களம் வரை புதிய தார்ச்சாலை அமைக்கும் பணி, ரூ. 30.57 லட்சம் செலவில் கொம்பாக்கம் அய்யனார் கோவில் அருகில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி என ரூ. 8.7 கோடி மதிப்பிலான மேம்பாட்டுப் பணிகளுக் கான பூமி பூஜை நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது.

இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, புதிய சாலை அமைத்தல், ஆழ்துளை கிணறு அமைத்தில் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் வீரசெல்வம், நீர்பாசனக் கோட்ட கண்காணிப்பு பொறியாளர் சுந்தர மூர்த்தி, செயற்பொறி யாளர் ராஜ்குமார், உதவிப் பொறியாளர் மதிவாணன், இளநிலைப் பொறியாளர் ஷாம்ஃபெயின், பொதுப்பணித்துறை கட்டிடங்கள் மற்றும் சாலைகள் மத்திய பிரிவு செயற்பொறியாளர் சீனுவாசன் இளங்கோ, இளநிலைப் பொறியாளர் முருகன், பொதுப் பணித்துறை பொது சுகாதாரக் கோட்ட செயற்பொறியாளர் சுந்தரி, உதவிப் பொறி யாளர் ரமேஷ்குமார், இளநிலைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் ஊர் முக்கியஸ் தர்கள் கந்தசாமி, பரிமளரங்கன், ஆறுமுகம், ஜெகன் மோகன், ஜனா, வேலு, தேசிகன், சுரேஷ், பாஸ்கர், விக்னேஷ், பாலதண்டாயுதபாணி, பன்னீர்செல்வம், கனகராஜ், ரச்சர்டு, அருண், பிரேம், ரவிச்சந்திரன், ரவி, பரதன், வங்கி சுரேஷ், சுகுமார், செல்வராசு, முருகையன், வரதராஜி, இளங்கோ, கார்மேகம், கார்த்தி, ராஜேஷ், அய்யனார், ஜெயபால், மணிமாறன், செல்வேந்திரன், ராமானுஜம், கோதை, பரசுராமன், ரங்கநாதன், கர்மவீரர் காமராஜர் ஆசிரியர் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த பிரபாகரன், ஜெயகணேஷ், ராஜசேகர், ராமலிங்கம், ராஜசேகர், சிவக்குமார், பிரபு, இளங்கோவன், ஜெயப் பிரகாஷ், சரவணன், ராதாகிருஷ்ணன், மனோஜ், காமராஜர், சரவணக்குமார், திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், அவைத்தலைவர் ஜலால் ஹனீப், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப் பாளர் குலசேகரன், சிறுபான்மை அணி அமைப்பாளர் முகம்மது ஹாலித், தொமுச தலைவர் அங்காளன், துணை அமைப்பாளர் சரவணன், துணைத் தலைவர் கதிரவன், தொகுதி துணைச் செய லாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் கள் அக்பர், சுப்ரமணி, கிளைக் கழக நிர்வாகிகள் மிலிட்டரி முருகன், சொக்கலிங்கம், பாண்டி யன், வெங்கடேசன், சேகர், முத்து, தர்மராஜ், பாலகுரு, ராஜேந்திரன், தட்சிணா, அபிமன்னன், பூச்சி ஆறுமுகம், தமிழ்செல்வன், அலீஸ்டர், லோகநாதன், காதர்பாஷா, விந்தியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### டிராபிக் இல்லாத பைபாஸ் ரூட்.

## 45 கி.மீ சேலம் ரிங் ரோடு கமலாபுரம் ஏர்போர்ட் டு மல்லூர்.



சேலம். மார்ச்.1

சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ரிங் ரோடு திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

இது கமலாபுரம் விமான நிலையப் பகுதியில் இருந்து புறப்படும் வகையில் அமைந்திருக்கிறது.

தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் மிக வேகமான தொழில் வளர்ச்சியை சேலம் அடைந்து வருகிறது. இதையொட்டி உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சேலத்தில் மக்கள் நெருக்கடியால் பிரதான சாலைகளில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. உதாரணமாக 4 ரோடு, 5 ரோடு, சீலிநாயக்கன்பட்டி, புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் வாகன ஓட்டிகள் தொடர்ந்து சிரமத்தை சந்தித்து வரு கின்றனர். சேலத்தை பொறுத்த வரை தென் மாவட்டங்களில் இருந்து கர்நாடகா செல்லும் வாகனங்களுக்கு நுழைவு வாயில் போன்று காணப்படுகிறது. சேலம் வழியாக பெங்களூரு பயணம்குறிப்பாக ஓசூர், பெங்களூருவில் தொழில் வாய்ப்புகளை தேடி பலரும் அங்கு குடிபெயர்ந்துள்ளனர். இவர்கள் தனி நபர் வாகனங்களில் வரும் போது சேலம் வழியாக தான் செல்ல வேண்டியிருக்கிறது. சரக்கு வாகனப் போக்குவரத்திலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. மேற்கு மண்டலம் மட்டுமின்றி, தெற்கில் இருந்து வரும் ஏற்றுமதி வாகனங்கள் சேலம் வழியாக தான் வட இந்திய மாநிலங்களுக்கு புறப்பட்டு செல்கிறது. இதன் காரணமாக பல இடங்களில் போக்குவரத்து நெரிசலை பார்க்க முடிகிறது.

சேலம் ரிங் ரோடு பொதுமக்கள் எதிர்பார்ப்பு: இதற்கு தீர்வு காணும் வகையில் ரிங் ரோடு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இதுதொடர்பாக பல ஆண்டுகளாகவே சேலம் பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை முன்வைத்துள்ளனர். தமிழக அரசு தரப்பின் பதில் என்பது, சேலம் ரிங் ரோடு திட்டம் தொடர்பாக ஆய்வறிக்கை தயாரிக்க முன்னேற்பாடு பணிகள் நடந்து வருகின்றன. விரைவில் நல்ல செய்தி வரும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கமலாபுரம் ஏர்போர்ட் மல்லூர் முதல்கட்ட திட்டம்: அதுசரி, சேலம் ரிங் ரோடு திட்டத்தை எப்படி செயல்படுத்தப் போகின்றனர் என்று சில தகவல்கள் வைரலாகி வருகின்றன. அதாவது, கமலாபுரம் விமான நிலையப் பகுதியில் இருந்து புறப்பட்டு தாரமங்கலம், இளம்பிள்ளை, நடுவனேரி, காக்காபாளையம், ஆட்டையாம்பட்டி, வெண்ணந்தூர் வழியாக மல்லூர் வரை 45 கிலோமீட்டர் தூரத்திற்கு முதல்கட்ட திட்டத்தை செயல்படுத்தவுள்ளனர். இதற்காக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

சவால் நிறைந்த மல்லூர் மின்னாம்பள்ளி ரிங் ரோடு: இரண்டாவது கட்டமாக மல்லூர் மின்னாம்பள்ளி, மூன்றாவது கட்டமாக மின்னாம்பள்ளி கமலாபுரம் வரை சென்று ஒரு வளையம் போன்று புதிய நெடுஞ்சாலை திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்துள்ளனர். இந்த மூன்று கட்ட திட்டங்களில் மிகவும் சவாலாக இருப்பது இரண்டாவது கட்டம் தான் என்று நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் மல்லூர் மின்னாம்பள்ளி இடையில் மலைகள் இருப்பதால், அவற்றை வெட்டி எடுத்து ரிங் ரோடு சாலை அமைப்பது சிரமம். இதற்காக சாத்தியக் கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

சேலம் மக்கள் கோரிக்கை 2026 தேர்தல் வாக்குறுதியா?: சேலம் பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருக்கும் ரிங்ரோடு திட்டத்தை தங்களின் தேர்தல் அறிக்கையில் அரசியல் கட்சிகள் சேர்க்க வேண்டும் என்றும், மத்திய அரசின் உதவியுடன் மாநில அரசு செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போதைய சூழலில் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிந்ததும் முதல்கட்ட குட் நியூஸ் வெளியாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78வது பிறந்தநாள் விழா முன்னிட்டு மேல்மலையனூரில் அன்னதானம் வழங்கப்பட்டது



செஞ்சி மார்ச்01

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா 78வது பிறந்தநாளை முன்னிட்டு மேல்மலையனூர் தெற்கு ஒன்றிய எம்ஜிஆர் இளைஞரணி செயலாளரும் ஒன்றிய கவுன்சிலர் ஈயக்குணம் முரளி ,அவர்களின் ஏற்பாட்டில் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவி ஈயக்குணம் ஊராட்சியில் நடைபெற்ற வந்த நிலையில் இன்று

மேல்மலையனூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி செயலாளர் பிரித்விராஜ், அவர்களில் வழிகாட்டத்தின் பேரில் தமிழ்நாட்டில் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு மேல்மலையனூர் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் தலைமையில் ஆட்சி அமைய வேண்டி மேல்மலையனூர் கோவிலில் சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது. பின்னர் மேல்மலையனூர் தெற்கு எம் ஜி ஆர் இளைஞர் அணி செயலாளர் ஒன்றிய கவுன்சிலர் ஈயக்குணம் முரளி அவர்களின் ஏற்பாட்டில்1000 நபர் களுக்கு அன்னதானம், வழங்கினார்.


நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய இணை செயலாளர் தனசேகர், ஒன்றிய வரதகரணி செயலாளர் காசி பாலாஜி, ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் ராமச்சந்திரன், மற்றும் கட்சி நிர்வாகிகள் ராஜதுரை, ராஜேஷ், பெருமாள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



ஈரோடு மாவட்டம் சிவகிரி பேரூராட்சிக்கு உட்பட்ட, பேருந்து நிலையம் அருகே, தமிழக அரசின் சாதனை மற்றும் திட்டங்கள் குறித்த, புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. இதனை அப்பகுதி பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்து சென்றனர்.

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம்




திருவள்ளூர் மார்ச் 01 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலககூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் தலைமை தாங்கினார்

கூட்டத்தில் சம்பா பருவ நெல் கொள்முதலுக்கு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை,வேளாண்மை பொறியியல் துறை,வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் ஆலோசனை மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 16 விவசாயிகளுக்கு ரூ.1,00,73,980 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங் கினார். மேலும் இக்கூட்டத்தில் 147க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் க.செல்வராஜு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) க.வேதவல்லி, நிர்வாக இயக்குநர் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, இணை பதிவாளர் கூட்டுறவு துறை,இணை இயக்குநர் கால்நடை துறை, தோட்டக்கலை துணை இயக்குநர், விவசாய சங்க பிரதிநிதிகள் ஆகியோர் உள்பட பல்வேறு துறைகளின் மாவட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421